


அமரர்

# வைரமுத்து தர்மதுரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# தர்மத்தின் தலைவன்

06.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## வயிரமுத்து தருமதுரை

அவர்களது சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

## நினைவலைகள்

# தர்மத்தின் தலைவன்

## 06.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பிறப்பில் தனித்துவமாகி மணி மஹாலின் காவிய
நாயகனாகி நாவலம்பதியானுக்கு சீரிய தலைவனாகி
சமூக நிறுவனமான வளர்பிறையின் வளர்ச்சிக்கு
உரமூட்டி அன்பின் இலக்கணமாகி பண்பின்
சிகரமாகி பாசத்தின் உறைவிடமாகி பொறுமையின்
ஊற்றாகி வந்தோரைப் புன்சிரிப்புடன் வரவேற்று
அனுசரித்து தன் நாமத்திற்கு ஏற்ப வாழ்ந்துகாட்டி
எங்களை இறைபணியிலும் சமூகப்பணியிலும்
சீர்தூக்கி இன்று நாவலம்பதியின் திருவடியில்
சரண்புகுந்த எங்களுடைய அப்பாவின் மாசற்ற
பாதக்கமலங்களுக்கு இம்மலர் சமர்ப்பணம்

- பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
04.04.1948

இறைவன் அடியில்
06.11.2016

# அமரர்
# வயிரமுத்து தருமதுரை

(முன்னாள் தலைவர், ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் ஆலயம்)

சீர்மொழி துர்மிகுசேர் ஐப்பசித் திங்கள்
சார்புள பூர்வ பக்க ஷஷ்டி திதியே எம்
பார் புகழ தருமதுரை புவி விட்டே
ஈசனடி சேர்ந்தா ரெண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் குடும்பத்தினருடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
 அர் [illegible] ணர் நாளும் அடிபரவ
மாங் [illegible] திதவழ் மாடவீதி
 மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
 சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
 கணபதி யீச்சரங் காமுறவே.

## திருவாசகம்

பாரொடு, விண்ணாய், பரந்த, எம் பரனே!
 பற்று நான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய், சிவபுரத்து அரசே!
 திருப்பெருந்துறை உறை சிவனே!
ஆரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்து உரைக்கேன்?
 ஆண்ட நீ அருள் இல்லையானால்,
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
 'வருக' என்று, அருள் புரியாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந் தனவே.

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதமே

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண் டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.

# வாழ்த்து

வான் முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வயிரமுத்து தருமதுரை அவர்களின் வாழ்வியல் தடங்கள்.....

## பிறந்த மண்ணின் சிறப்பு

இந்து மா சமுத்திரத்தின் நடுவே எழில் பெற்று விளங்கும் இலங்காபுரியின் சிகரமெனத் திகழும் யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் கிழக்கு பிரதேசம் தனிச்சிறப்புப் பெற்றது. இதில் யாழ் நகரிலிருந்து பலாலி வீதியின் இருமருங்கிலும் செழித்து விளங்குகின்ற அழகிய கிராமமே ஊரெழுவாகும்.

செம்மண் பரப்பில் நிறைந்திருக்கும் இப் பிரதேசமானது உப உணவுப் பயிர்ச் செய்கையில் முன்னிலை வகிக்கின்றது. இக்கிராமத்தில் பலர் அரச பதவிகளிலும் விவசாயத்தில் முழுமையாக ஈடுபடுவோரும் வியாபாரத்துறையில் வாகனத் துறையில் இருப்போரும் பரவலாக வாழும் அழகிய கிராமமான ஊரெழுவின் கிழக்குப் பகுதியில் பிறந்தவர் தான் தவசி நன்னிப்பிள்ளை ஆவார். இவர் மல்லாகத்தில் வசித்த தவசி வயிரமுத்து என்பவரைத் திருமணம் செய்து ஊரெழுக் கிராமத்தில் வசித்து வந்தனர்.

## அமரரின் பிறப்பும் வளர்வும்

வாழ்வியலை இன்பியலாகக் கொண்டு வாழ்ந்து வந்த இவர்களின் நல்வாழ்வின் பலனாக வம்சம் தளைக்க வந்தவர்கள் நவரத்தினங்கள். இராசதுரை, சிவலிங்கம், தருமதுரை, தங்கராசா, தவராஜா ஆகிய ஐந்து புத்திரர்களும் இராசமணி, இராசமலர், திரவியம் இராசாத்தி ஆகிய நான்கு புத்திரிகளும் கிடைத்தனர். இவர்களது குடும்பத்திலே ஏழாவதாக வந்து உதித்தவர் தான் அமரர் தருமதுரை ஆகும். இவர் இம் மண்ணகத்தே 04.04.1948ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை, தாயார் அரவணைப்பில் வளர்பிறையென வாழை இளங்குருத்தென அமரர் தருமதுரை வளர்ந்து வந்தார். இவர் பள்ளிப் பராயத்தை அடைந்ததும் ஊரெழு கணேச வித்தியாசாலையில் அவரது தந்தையார் ஆரம்பக் கல்விக்காக அனுப்பி வைத்தார். தமது கல்வியை நிறுத்தியவுடன் தொழில் புரியத் தொடங்கி சில வருடங்கள் கழித்து தனது சொந்தக் காலில் நிற்க வேண்டுமென எண்ணி மோட்டார்க்கார் ஒன்றைக் கொள்வனவு செய்து பொது மக்களுக்கான சேவையை 1969 ஆம் ஆண்டு மேற்கொண்டார். இத்தொழிலை மேற்கொண்டு வரும் காலத்தில் தந்தையை இழந்தார். தாயாரின் அனுசரணையுடன் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது 24ஆவது வயது வந்தபோது அவரது தாயாரும் சகோதரர்களும் திருமணப் பேச்சை ஆரம்பித்தனர். ஊரெழு கிழக்கின் சின்னட்டியன் பரம்பரையில் பசுபதி மாணிக்கம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியாகிய சிவமணியை வாழ்வியல் துணையாக ஏற்றுக்கொண்டார். இவர்களின் திருமணம் 08.09.1972 இல் நடைபெற்றது. இதன் மூலம் இராசேந்திரம், மகேந்திரம், தெய்வேந்திரம், புவனேந்திரம், சந்திரன் குணேந்திரம், சந்திராதேவி சறோஜாதேவி ஆகியோரை மைத்துனன், மைத்துனிகளாக அடைந்தார்.

இல்லறத்தை நல்லறமாக காத்தமையால் நன்றோடு நன்மக்களைப் பெற்றுச் சிறந்த தந்தையானார். அன்னாரின் வாழ்வியல் பந்தம் காரணமாக தர்மேஸ்வரி, சுதாகரன், சுதர்சன், சுதா, சுமன் ஆகியோர் இப்புவியில் பிறந்தனர். 'தந்தை மகற்காற்று நன்றி அவயத்து முந்தியிருப்பச் சொல்' என்ற பொய்யா மொழிப்புலவன் வள்ளுவனின் கூற்றுக்கமைய தன் பிள்ளைகளை வளமாக வளர்த்துவிட வேண்டுமென்ற ஆசையால் பிள்ளைகளுக்கு தான் கல்வி பயின்ற ஊரெழு கணேசவித்தியாசாலையில் கல்வி கற்பித்தார்.

இவ்வேளையில் கார் வாடகைத் தொழிலுடன் 1973ஆம் ஆண்டு விவசாயத்திலும் ஆர்வம் காட்டினார். இதே ஆண்டின் இறுதிப் பகுதியில் கொழும்புக்கு விளைபொருட்களை ஏற்றி போக்குவரத்து சேவை செய்வதற்காக லொறி ஒன்றைக் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபட்டார். இதன் பின்பு விவசாயம் செய்வதற்காக காணிகளையும் கொள்வனவு செய்து விவசாயத்தில் கூடிய பலனைப் பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதன் பின்பு 1981ஆம் ஆண்டு மினிபஸ் ஒன்றைக் கொள்வனவு செய்து 764 பாதையில் சேவையில் அமரர் ஈடுபட்டார். பின்பு 1982ஆம் ஆண்டு மீண்டும் கொழும்பு போக்குவரத்துக்காக லொறி கொள்வனவு செய்து சேவையில் ஈடுபட்டார்.

## சமூகப்பணி

ஊரெழு கிராமத்திலே முதன் முதலாக ஓர் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நினைத்தவர்களில் அமரரும் ஒருவராவார். கடந்த 1974ஆம் ஆண்டு கட்டட வேலை ஆரம்பித்து 1976ஆம் ஆண்டு நிர்வாக சபை அங்குரார்ப் பணம் செய்யப்பட்டு வளர்பிறை சனசமூக நிலையத்தின் நிர்வாக சபை உறுப்பினராக இணைந்து 13 வருடங்கள் சேவை புரிந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயப் பணி

ஊரெழு கிழக்கு ஞானவைரவர் ஆலய முகாமையாளரின் நிர்வாகத்தில் இருந்து பரிபாலனசபை ஒன்று கடந்த 06.07.1986 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டபோது அமரர் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு 19.06.1992 வரை சேவையாற்றினார். மீண்டும் 1997ஆம் ஆண்டு தொடக்கம் 16.01.2000 ஆம் ஆண்டு வரை தலைவராக சேவையாற்றி பல திருப்பணிகளைச் செய்து முடித்தார். பின்பு இறுதிக் காலப்பகுதியில் உப தலைவராக ஒரு வருடம் சேவையாற்றி வந்துள்ளார்.

## மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

ஒருவரின் சமூக, ஆன்மீகப் பணிகள் தொடர அவரின் மனைவியின் பின்புலமான ஒத்துழைப்பு மிக அவசியமானது அந்த வகையில் அன்னாரின் மனைவி சிவமணி அவருக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டு வந்தார். அமரர் தமது மூத்த மகளான தர்மேஸ்வரியை 1998ஆம் ஆண்டு ஊரெழு கிழக்கு நடராசா இராசமலர் தம்பதிகளின் புத்திரன் மகேந்திரராசா என்பவருக்கு வாழ்க்கைத் துணைவனாக்கினார். இவர்களுக்கு லகின்சன் என்ற மகன் கிடைக்கப் பெற்றார். மூத்த மகளுக்கு குழந்தை பிறந்ததும் ஏற்பட்ட நோயினால் இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டார்.

அடுத்த மகள் சுதா அச்செழுவில் வசிக்கும் சிவராசா - கமலா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனான ஜெகன் என்ற கலைப்பட்டதாரியைத் திருமணம் முடித்து ஜன்சிகா, சுஜானிகா, துஷாறா ஆகிய பேரப்பிள்ளைகள் கிடைக்கப் பெற்றார்.

அடுத்து மகன் சுதாகரன் ஜேர்மனிக்குச் சென்று தொழில் பார்த்த நிலையில் 2005ஆம் ஆண்டு மானிப்பாயில் வசிக்கும் தங்கராசா மகேஸ்வரி தம்பதிகளின் புத்திரியான விதுலா என்பவரைத் திருமணம் முடித்து சுவிற்றி, சுபானா ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்று இன்புற்றிருந்தார்.

அடுத்து லண்டனில் தொழில் பார்க்கின்ற சுதர்சன் அவர்கள் 2009ஆம் ஆண்டு இணுவிலில் வசிக்கும் இராசதுரை தவமணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியான கீர்த்தனாவைத் திருமணம் முடித்து லவிஸ் என்ற பேரப்பிள்ளை கிடைக்கப் பெற்றார்.

கடைக்குட்டி மகன் சுமன் அரியாலையில் வசிக்கும் இரத்தினம் ராகினி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியான நதியா என்பவரை கடந்த 2016 ஆம் ஆண்டு மணம் புரிந்ததை அமரர் சுகயீனமுற்ற நிலையிலும் தனது மனக்கண்களால் பார்த்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பு

வாழ்க்கையில் எத்தனை சிறப்புப் பெற்றாலென்ன? ஊர் போற்றும் உத்தமராக வாழ்ந்தாலென்ன? எல்லாத் துறையிலும் வல்லாளனாக இருந்தாலென்ன? மனிதன் மரணத்தை ஒருபோதும் வெல்லவே முடியாது. அது அவனை வெல்லும் மாபெரும் சக்தி. சில காலம் நோய்வாய்ப்பட்டு இருந்தவர் 06.11.2016 அன்று இவ்வுலக வாழ்வை விட்டு நாவலம்பதி ஞானவைரவப் பெருமானின் திருப்பாதங்களைச் சென்றடைந்தார். "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ இம் மாநிலத்தே" என்பது போல எம்மை விட்டுப் பிரிந்த அமரரை எண்ணி கவலை கொள்ளாது அவரின் ஆத்ம ஈடேற்றத்துக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பணிவோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் உள்ளக் குமுறல்கள்

## மனைவி

அன்று முதல் இணைந்து நான் ஆலயங்கள்,
பல கொண்டாட்டங்களுக்கு ஆனந்தம் மேலிட
சுமங்கலியாய் சுற்றி வந்தேன். இன்று உங்கள்
பிரிவினால் அமங்கலி ஆகிவிட்டேன்.
இழப்பதற்கு இனி ஏதுமில்லாமல் இவ்வுலகில் தவிக்கின்றேன்.

## பிள்ளைகள்

கல்வியில் உயர்வு பெற்று அதன் வாயிலாக
எங்களில் இருவரை வெளிநாட்டுக்கு அனுப்பியும்
ஏனையவர்களை தங்களுடனே வைத்து எங்கள்
அனைவரையும் சமூகத்தில் வளமாக்கினீர்களே
எல்லாம் வல்ல ஞானவயிரவனின் அருட்பார்வை
பட்டிட ஏக்கத்துடன் எம்மைவிட்டு
ஏனப்பா சென்று விட்டீர்!

## மருமக்கள்

சிந்தனையில் சீர் கொண்டு சிறப்புடனே எம்மை
அணைத்து சாந்தமாய் பேசி நின்று மாண்புடன்
காத்த மாமா நிந்தனை என்ன செய்தோம்
நெடு தூரம் போவதற்கு எந்த நாளும் உம் நினைவு
எம்மை விட்டுச் சென்றிடுமோ!

## சகோதரர்கள்

ஒரு மனையில் நாம் பிறந்து இல்லறமும் கண்டோமே
உறவுதனில் சோதரராய் உயர்வுகளைப் பெற்றோமே
ஒரு போதும் சினந்தறியா ஆசைமிகு சோதரராய்
ஊரறிய வாழ்ந்தோமே உங்களை நாங்கள்
தர்மன் என்று நினைக்காமல் வீமன் என்றே
அழைப்போமே. இன்று விழிமூடி எங்கு சென்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள்

எங்கள் எல்லோரையும் மடியில் வைத்து செல்லக் கதைகள் பேசி பாடசாலைக்கு மோட்டார் வண்டியில் ஏற்றிச் சென்று வளர்த்த தாத்தாவே. வெளிநாடுகளிலிருந்து நாங்கள் வருகின்றபோது எங்களுக்கு முத்தம் தந்ததை இங்கிருந்து மீட்டிப் பார்க்கின்றோம்.

அன்புத் தாத்தாவே இதுவரை காலம் நீங்கள் எமக்கு ஒரு தூணாக இருந்தீர்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் எங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வரம். உங்கள் மறைவு எங்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. எங்களுடைய தாத்தாவை நாம் எங்கே காண்பது.

## எங்களது அப்பா

குறைவில்லாது எம்மை வளர்த்து நிறைவான வாழ்விற்கு வழிகாட்டிய செம்மலே. பாசத்தின் பிறப்பிடமே நீ[illegible]ள் அன்பான பேச்சால் அரவணைத்து நிகரில்லா நண்பர்களைப் பெற்ற நி[illegible] உயர் பண்பின் உறைவிடம் நீங்கள். எங்கள் இதயத் துடிப்பாக இருந்து நங்கள் எங்களை வாழ வைத்த குலதெய்வமே. என்றென்றும் எங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி நீங்கள்.

எங்களது அப்பாவின் பலவிசேட பண்புகளை நாம் என்றென்றும் மறவோம். நல்ல பண்பான குடும்ப சமூக மற்றும் பாடசாலைச் சூழலில் கண்ணியமாகக் கொள்ள வேண்டிய முறை தொடர்பான பல தவறான நம்பிக்கைகளும் உள்ளன. சில தந்தையர்கள் தம் பிள்ளைகளுடன் மிகக் குறைவாகவே கதைப்பதுண்டு. வேறு சிலர் பிள்ளைகள் தன்னைப் பார்த்து பயப்பட வேண்டும் எனும் பிழையான நம்பிக்கையில் எதுவித பிரயோசனமின்றிப் பிள்ளைகளுக்குக் கடுமையான தண்டனையை வழங்குவதுண்டு. ஆனால் எங்களுடைய அப்பாவை நாங்கள் பார்க்கும் போது அவருடைய பார்வை கண்டிப்பானதாக இருக்கின்றதோ அல்லது அணைக்கின்ற பார்வையோ என்பதை எங்களால் அறியமுடியும்.

எங்கள் எல்லோரையும் கல்வி கற்பிக்க வேண்டுமென்று எண்ணி கற்பித்தார். பின்பு எங்களை நல்வழிப்படுத்தி பொருளாதாரத்தில் மேலோங்கி நிற்க வேண்டும் என எண்ணி எங்களில் இருவரை வெளிநாடுகளுக்கு அனுப்பி முன்னேற்றினார். எங்களுக்கும் காணிகள் கொள்வனவு செய்து எமது கிராமத்தில் நல்லதோர் இடத்தில் நாங்கள் இருப்பதற்கு வழிவகுத்தவர் என்றால் அதற்கு அப்பா தான் காரணம். எங்களுடைய அப்பா தான் எப்பொழுதும் உழைப்பில் உயர்ந்து வரவேண்டுமென்று எண்ணி முயற்சியாளராகவே இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எங்களது அப்பாவிடம் பின்னைய காலங்களில் ஓய்வாக இருக்கும்படி கூறுவோம். உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம் எங்களை இந்த நிலைக்கு உயர்த்திவிட்ட நன்றிக் கடனுக்கு உங்களை இருக்கவிட்டு நாங்கள் அழகு பார்க்க வேண்டும் என்று எண்ணியிருந்தோம். ஆனால் விதி விளையாடி விட்டது. அப்பாவுக்கு இந்த வயதில் கொடிய நோய் வரும் என் கனவில் கூட நினைக்க வில்லை.

நாங்கள் சகோதரரின் திருமணத்தை நடத்தி வைத்து திரும்ப வெளிநாட்டுக்கு சென்றவுடன் துயரச் செய்தி காதில் கிடைத்ததும் பதறிவிட்டோம். எங்களை உயர்த்திவிட்ட தலைவனுக்கு இறுதி அஞ்சலியும் மூத்த மகனுக்குக் கிடைக்கும் கொள்ளி வைக்கிற பாக்கியத்தை அப்பன் தவறவிடுவானா? உடன் நாங்கள் இருவரும் உடனடியாகத் திரும்பி எங்கள் தெய்வத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றியுள்ளோம்.

"கடவுள் கொடுத்த வரம் கிடைக்கவில்லை எங்களுக்கு
கடவுளே கிடைத்தார் வரமாக அப்பா"

*பிள்ளைகள்*
*சுதாகரன், சுதர்சன், சுமன்*

# மகள் சோக அலை

## எங்கள் அன்பு அப்பாவே

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்து எங்களின் வளமான வாழ்விற்கு அத்திவாரமாகவும். நெறி தவறாத வாழ்க்கை வாழ்வதற்கு வழிகாட்டி யாகவும் திகழ்ந்தீர்கள். பொழுதுகள் ஒவ்வொன்றாக விடிந்து கொண்டிருக்கிறது. யாவும் இயல்பாக நடக்க அப்பா நீங்கள் இல்லை என்ற வெறுமை எங்களால் தாங்க முடியவில்லை. மரணம் என்பது ஒவ்வொருவருக்கும் உரியது என எங்களை நாங்களே சமாதானப்படுத்த முயல்கிறோம்.

தாக்கங்கள் பல வரும் வேளையில் எமக்கு ஊக்கங்கள் பல கொடுத்தீர்கள் இனி யாரை நாம் நாடுவோம்.

அறிவுரைக்கு ஏற்றபடி வாழ்க்கை முறையை வாழ்ந்தீர்கள். வாழ்க்கை முறை சரியெனின் விழிப்புப் போல் பிறப்பும் நித்திரை போல் இறப்பும் என்பீர்கள். அதே போல் உங்கள் இறுதி யாத்திரை அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இவ்வளவு சீக்கிரம் எங்களை விட்டுப் பிரிவீர்கள் என எதிர்பார்க்க வில்லை. ஆதலால் மனம் ஆறவில்லை. இந்து மத தத்துவத்தின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையை வாழ்ந்தீர்கள். அதற்கேற்ப உங்கள் இறப்பும் அமைந்தது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு மகள்
ஜெ. சுதா

*நம் உள்ளத்தின் உள்ளே வாழும் ஓர்*
*உன்னதமான தெய்வம்*
*நம் அப்பா...........*

**சகலர்கள்**

எங்களுடைய குடும்பத்தில் அண்ணாவின் ஸ்தானத்தில் இருந்து எங்கள் எல்லோருக்கும் ஒத்துழைப்பு வழங்கி எங்களின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்த தருமதுரை அண்ணாவை எங்களால் மறக்க முடியுமா?

**இஷ்ட தெய்வத்தை வேண்டி.....**

நாவலம் பதியுறையும் ஞான வைரவனே
ஒப்பிலா ஞான வைரவா உன் புகழ் தினமோதும்
தப்பிலா அடியுவரின் குறைதீர் நாயகா
எப்பொழுதும் உந்தன் திருத்தலம் நாடி வந்து
அப்பனே வைரவா என்றே தொழுதிட்டு
இப்புவி விட்டேகி உன் பாதம் தேடி வந்து
செப்பிடும் தருமதுரை தன்னை
நாய் வாகனத்துடன் தோன்றும் ஞான வைரவனே
எம் தலைவனை ஏற்றிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊறெழு கிழக்கு நாவல்பதி ஞான வைரவர் ஆலய பிரதம குருவின் அனுதாபச் செய்தி

தோன்றி மறைவதே இயற்கையின் சுழற்சி. ஆத்மாக்கள் தோன்றி மறை கின்றன. நேற்றிருந்தார் இன்றில்லை. உடம்போடு உயிருக்குள்ள உறவு இல்லாது போவதுதான் உலக நியதியாக நடைபெற்று வருகிறது.

இன்று எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட ஊறெழு நாவலம்பதி வைரவர் தேவஸ்தான முன்னை நாள் தலைவர் திரு.தருமதுரை அவர்களின் இழப்பு ஆலயத்திற்கும், சமூகத்திற்கும் பெரும் கவலையினைத் தந்தாலும் அவரது சேவைகளை யாரும் மறந்துவிட முடியாது. ஆலய விடயங்களில் பெரிதும் அக்கறையுடையவராக அரும்பணி ஆற்றியவர். ஆலயத்தின் பல்வேறுபட்ட திருப்பணி வேலைகளை முன்னின்று செய்த பெருமைக்குரியவர். ஆலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக செயற்பட்ட வர்களில் பிரதானமானவர். சகல மக்களுடமை பண்புடனும், ஆர்வத்துடனும், இன்முக சிரிப்புடனும் பழகும் பண்பாளன் இவராவார்.

திரு.தருமதுரை அவர்களின் இழப்பை எவராலும் ஈடுசெய்ய முடியாது. அவரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா நாவலம்பதியானின் திருவடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன். ஆலய மணியினை செய்து தந்த இவர் இறைபதம் அடைந்தாலும் ஆலய மணி நாதமாக எம் மனதில் என்றும் இருப்பார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரம்மஸ்ரீ கி.கௌரிசங்கர சர்மா
ஆலய நித்திய அர்ச்சகர்
ஊறெழு நாவலம்பதி வைரவர் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வ.தருமதுரை அவர்களின்
## கடந்தகால நினைவுகள் குறித்த சில பகுதிகள்

எமது வளர்பிறை சனசமூக நிலைய ஆரம்பகால கட்டத்தை நோக்குமிடத்து அமரர் அவர்களின் தலைமையில் அக்கால இளைஞர்களின் பெரு முயற்சியின் பயனாக நிலையத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது. பின்னர் முதன்முதலாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தில் இவரும் நிர்வாக உறுப்பினராக இருந்து பின்னர் 1986இல் நிலையத்திற்கான கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இன்று எமது சனசமூக நிலையம் அபார வளர்ச்சி அடைந்து ஆறு கட்டத் தொகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. இதற்கு காரணம் அமரரின் தலைமையிலான இவரது அத்திவாரமிடலே ஆகும்.

மற்றும் இன்று அமரரது மகன் த.சுதர்சன் அவர்கள் எமது நிலையத்திற்கும் கிராமத்திற்கும் பல வழிகளில் பல உதவிகளைச் செய்த வண்ணம் உள்ளார். குறிப்பாக எமது வளர்பிறை நூல் நிலையத்துக்கு ஒரு தொகை நூல்கள் வர்ணம் பூசுதல் மற்றும் மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு நிதி, திருமண உதவித் தொகை, மருத்துவ உதவித்தொகை நிதி போன்றவற்றிலும் இவரின் பெரும்பங்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

அமரர் வயிரமுத்து தருமதுரை அவர்களின் மரணச் செய்தியை அறிந்து எமது நிலையம் பெருந்துயர் அடைந்துள்ளது. எனவே அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானவைரவப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

இ.மன்மதராசன்
செயலாளர்,
ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமத்தில் பெருமையாய் வாழ்ந்த உத்தமன்

அமரர் தருமதுரை அவர்களின் மறைவு ஊரெழு கிராமத்துக்கு ஓர் பேரிழப்பாகும். இவர் என்றும் எல்லோரிடத்தும் இனிமையாகப் பழகுபவர். தனது கம்பீரமான குரலால் தனக்குச் சரியெனப்பட்டதைத் துடுக்காக வெளிப்படையாகப் பேசும் குணமுடையவர். தனது அயராத உழைப்பால் தனது குடும்பத்தை மிகவும் மேல் நிலைக்குக் கொண்டு வந்தவர்.

நாவலம்பதி வைரவர் ஆலயத்தின் தொண்டனாகவும் தலைவராகவும் நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து அளப்பரிய சமயப்பணி ஆற்றியவர். அத்துடன் வளர்பிறை சனசமூக நிலையம் உருவாக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்களில் இவருமொருவராவர். இங்கு காணப்படும் வைரவர் ஆலயம், சனசமூக நிலையம் முன்பள்ளி நூல்நிலையத்தின் கட்டட வளர்ச்சிக்கு போதிய பண வசதி கொடுத்ததோடு இங்கு நடாத்தப்படும் போட்டிகளுக்கு பல பரிசுப் பொருள்களையும் வழங்கியுள்ளார்.

மரணம் என்பது இயற்கையின் நியதி. இதை எவராலும் தடுக்க முடியாது. அமரர் தருமதுரை ஒன்றரை ஆண்டுகளாக நோயின் பிடியில் சிக்கித் தவித்தார். இந் நோயிலிருந்து இவரை மீட்டெடுப்பதற்காக இவரின் பிள்ளைகள் பெரும் தொகைப் பணத்தைச் செலவு செய்து பெரும்பாடுபட்டனர். விதியை வெல்ல முடியவில்லை. காலன் இவரைக் கவர்ந்துவிட்டான்.

"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்ற வள்ளுவர் வார்த்தையும் ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் வருவாரோ என்ற ஔவை மூதாட்டியின் அறிவுரையையும் நினைத்து ஆறுதல் அடைவோமாக. அமரரின் பிரிவால் துயருறும் அவரது மனைவி, பிள்ளைகள் உறவினர்களுக்கு ஆறுதலளிக்க எல்லாம் வல்ல நாவலம்பதி வைரவப் பெருமானை வேண்டித் துதிப்போமாக.

ஓம் சாந்தி!! சாந்தி!! ஓம் சாந்தி!!!

க.கிருஷ்ணவாசன்
ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்
ஊரெழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுதாரணமான மனிதர் அமரர் வயிரமுத்து தருமதுரை

சிறுவயதில் வாகனத்தில் அவர் வரும்போது அதைக்கண்டு அதிர்ந்த மனிதர்களும் உண்டு. சமூகத்தில் இவ்வாறான தொழிலை செய்யப் பணம் இருந்தாலும் முன்வரமாட்டார்கள். அப்பணியை அவர் தொடங்கியதால் தற்போது நாமெல்லாம் அதற்கு சொந்தக்காரனாய் இருக்கின்றோம். ஏன் வெளிநாட்டில் கூட பெரும் தொழிலதிபர்களாக இருக்கின்றனர். அவரின் நற்பேறாக அமைந்த மனையாள், செல்வங்கள், பட்டதாரி மருமகன், காணி, மனை என்ற பாரதியின் கூற்றுக்கு ஒப்பாக சிறப்பாக வாழ்ந்தவர் நாம் சொல்வதற்கப்பால் இறுதிக் கிரியையின் போது மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்மார் குழம்பிக் கதறிய கதறல்கள் கூடியிருந்த அனைவரின் உள்ளத்தை நொருங்கச் செய்தது. இவை களை ஒப்புநோக்கும் போது பெறுமானம் முன்னுதாரணமானவர் என்பது சான்று பகர்கின்றது.

சீ.குணநாயகம்
பலாலி வீதி,
உரும்பிராய் மேற்கு.

## தர்மம் உலகிலே – தலைமைத்துவப் பண்பாளன்

பார் போற்றும் யாழ்.குடா மண்ணில் மேவும் சீர்மிகு ஊரெழு எனும் பதியில் ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டில் ஏப்ரல் நான்காம் திகதி தன்னில் ஊரெழு மண்ணிற்கு பெருமை சேர்க்க உதித்தனன். வயிரமுத்து தருமதுரை உரமூட்டும் கல்விதனை ஊரெழு கணேச வித்தியாசாலையில் கற்று இருபத்து நான்கு வயதில் எனது அன்புத் தங்கையைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்று அருமைமிகு மூன்று ஆண்களையும் இரண்டு பெண்களையும் வாரிசாக்கி இங்கு வாழும் காலத்தில் அவர்களுக்குரிய கல்வி, செல்வம் தன்னை அவரவர்க்குரியவாறு நல்கி இந்த புவியினர் போற்றும் வண்ணமாக பொலிவுற திருமணம் .

இளவயதில் கார், சிற்றூர்தி லொறி போன்ற வாகனங்களுக்கு சொந்தக்காரராகி யிருந்து சேவையை வழங்கி மக்களின் நன்மதிப்புப் பெற்றிருந்தீரே. ஊரிலே உயர்ந்து நிற்கின்ற வளர்பிறை சனசமூக நிலையத்தின் ஆரம்பத்திற்கு வழியமைத்திருந்தீரே. வளர்பிறையின் நிர்வாக உறுப்பினராகவும் செயற்பட்டதை மறக்க முடியுமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு நல்லருள் பொழியும் எங்கள் நாவலம்பதியின் தலைமையை ஏற்று பத்து வருடங்கள் நற்சேவை செய்ததை மறப்போமா?எங்களது குடும்பத்தின் மூத்த மருமகனாக இணைந்ததையும் எனக்கு மூத்த மைத்துனராக விளங்கி எங்கள் அனைவருக்கும் உதவும் கரங்களான தங்களை மறக்க முடியுமா.

எங்களது தந்தையின் விவசாயத் தொழிலையும் தாங்கள் ஆரம்பித்து அதன் மூலம் வாழ்க்கையை உயர்த்தியதையும் மீட்டிப் பார்க்கின்றோம். உங்கள் பிள்ளைகளின் புவியினர் போற்றும் வண்ணமாக பொலிவுற திருமணங்கள் செய்தும் வைத்தார். திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற வாக்கிற்கமைய இரண்டு மகன் வெளிநாட்டில் உள்ளார்கள். ஆலயங்கள் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு நிதி அன்பளிப்புக்களும் ஞான வைரவர் ஆலயத்திற்கு மணிக்கோபுரம் அமைத்துத் தந்ததையும் மறக்க முடியுமா? ஊரெழு மைந்தன் தருமதுரை என்ற பார் போற்றும் வகையில் வாழ்ந்து பல சேவைகளைப் புரிந்த அவர் கொடிய நோயினால் அவரை இழந்து தவிக்கின்றோம். அமரர் நாவலம்பதி ஆலயத்தின் உபதலைவராக இறக்கும் போதும் சேவையாற்றினார். அதைவிட பல பொது வேலைத்திட்டங்களுக்கும் போதிய நிதி வழங்கி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமரரின் திருப்பணிகளில் அவரது பிள்ளைகள் முழு வீச்சுடன் ஈடுபடுவார்கள். அந்நாளில் வாழ்வதன் தடத்தைப் பேணி அனைவரும் எங்களுள் ஒற்றுமையைப் பேணி, எம் மண்ணின் மைந்தனின் பெருமையிது என்றேத்தி எல்லோரும் சேர்ந்துழைத்து நற்றவ வாழ்வு நாம் வாழ்ந்து மேலும் நாடு செழிப்புற வாழ்வோம். நாமே. நீங்கள் மறைந்தாலும் எங்களின் நாவலம்பத ஞான வைரவரின் அருள் உங்கள் குடும்பத்திற்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞானவயிரப் பெருமானை வேண்டுவோமாக.

ப.இராசேந்திரம்
(செயலாளர்,
பரிபாலனசபை,
நாவலம்பதி ஞான வயிரவர் ஆலயம், ஊரெழு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வயிரமுத்து தருமதுரை அவர்களின் இறுதி நிகழ்வின் இரங்கலுரையில் அகில இலங்கைச் சமாதான நீதிவான் ப. இராசேந்திரம்

இன்று எங்கள எல்லோரையும் தவிக்கவிட்டு மீளாத்துயில் கொண்டிருக்கும் வயிரமுத்து தருமதுரை அதாவது எங்களுடைய அத்தானை ஒரு கணம் நான் பார்க்கின்றேன். 45 வருடங்களுக்கு முன்னரான நிலையை முன்னோக்கி பார்க்கின்ற வேளை அவர் எப்படி இருந்தார். பின்பு திருமணம் முடித்து வாழ்க்கையில் தனது உழைப்பால் உயரவேண்டுமென்று நினைத்து வாழ்ந்தார். இல் வாழ்க்கையின் பொக்கிசங்களாக மூன்று சிங்கங்களையும் இரண்டு தாரக்களையும் இவ்வுலகில் உலாவ விட்டு அவர்களையும் நல்ல நிலைக்கு இட்டு தற்போது

பிள்ளைகளுக்காக நாங்கள் வாழவேண்டும் என்ற எண்ணம் உருவாகிய வேளை கொடிய நோய் மூலம் இறைவன் தன்னுடனே அழைத்துக்கொண்டான். ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான் என்கின்ற நிலையினால் மறைந்து விட்டார். இந்த நிலையில் அவர் எமது கிராமத்திற்கு ஆற்றிய சேவைகளை ஒரு தடவை மீட்டிப் பார்க்க வேண்டிய கட்டாயம் உண்டு.

ஊரெழு கிராமத்திலே தற்போது கொடி கட்டிப் பறக்கின்ற வளர்பிறை சனசமூக நிலையத்தினை அமைப்பதற்கு தொடக்கத்தில் முழுவீச்சில் ஈடுபட்ட இளைஞர் களில் அமரரும் ஒருவர். அதன் பின்பு 1976ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட நிர்வாக சபை உறுப்பினர்களில் இவரும் ஒருவர். கிட்டத்தட்ட .....வருடங்கள் நிர்வாகத்தில் இணைந்து தன்னாலான பங்களிப்பை நல்கியிருந்தார். இதே போல கடந்த 1986ஆம் ஆண்டு ஞான வைரவர் ஆலய பரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் தலைவராக அமரர் ஏக மனதாகத் தெரிவுசெய்யப் பட்டு 1992ஆம் ஆண்டு வரை பணியாற்றி மீண்டும் 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையுமாக ஒன்பது வருடங்கள் தலைவராகவும் தற்போது உப தலைவராகவும் ஒரு வருடகாலம் இறை பணியாற்றி வந்துள்ளார். இந்த நிலையில் ஞான வயிரவர் ஆலயத்திற்கான மணிக்கோபுரத்தைத் தனது உபயமாகவும் ஆலயத்தின் ஒவ்வொரு திருப்பணிக்கும் தங்களாலான நிதியை அன்பளிப்புச் செய்துள்ளார். சென்ற வருடம் நடைபெற்ற நிர்வாகத் தெரிவிலும் அவரைத் தலைவராக இருக்கும்படி தற்போதைய தலைவர் தர்மகுலசிங்கம் கேட்போதுதான் விரைவில் லண்டனுக்கு தனது மகனிடம் செல்லவிருப்பதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்துவிட்டார். அவரது மகன் சுதர்சன் கூட தனது மகனுடைய 5 ஆவது பிறந்தநாளுக்கு அப்பா அம்மாவை அழைத்து விழா செய்யவிருந்ததாகவும் விதி இப்படி விளையாடும் என்று அவர் நினைத்தாரா. அல்லது நாங்கள் தான் நினைத்தோமா. இறைவன் படைத்திருந்தான் இன்று அவரோ எடுத்துள்ளார். எங்களால் என்ன செய்யமுடியும் ஐயோ என்று அழுவதைத் தவிர வேறு வழியில்லை. இருந்தாலும் அவர் தனது குடும்பத்திற்கு பிள்ளைகளுக்கு செய்ய வேண்டியவை எல்லாம் நிறைவேற்றியுள்ளார். தனது முதலாவது பேரனான லகின்சனை தனது மூத்த மகளுடைய நினைவாகவே கவனிப்பதையும் அவனை எப்படியும் தான் வெளிநாட்டிற்கு அனுப்பப்போவதாக என்னிடம் அடிக்கடி கூறுவார். நான் அதற்கு சம்மதம் தெரிவிப்பேன். இறுதியாக தனது கடைக்குடிக்கும் தான் உயிருடன் இருக்கும் போது திருமணத்தை பிள்ளைகள் எல்லோரும் ஒருங்கிணைந்து நடத்தியதை தனது இயலாத நேரத்திலும் கூட கண்களால் மட்டும் பார்க்கக் கூடியதாகவும் பிள்ளைகள் சகோதரர்கள் ஏன் நாங்கள் கூட கண்கள் கலங்கிய நிலையில் மண்டபத்தில் இருந்தோம். இந்த நேரத்தில் ஒரு விடயத்தை மட்டும் குறிப்பிட்டே ஆக வேண்டும். ஊரெழு முதியோர் சங்கத்தின் சார்பாக 20 முதியவர்களைக் கௌரவிக்க வேண்டும். இது விடயமாக நானும் ஆனந்தராஜா மாஸ்டரும் அமரருடன் 2015ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கதைத்து அனுசரணையாளராக இவரையும் இன்னும் ஒருவரையும் சேர்த்து இரண்டு அனுசரணையாளர்களுடன் விழாவை நடத்தக் கதைத்தபோது பூரண சம்மதம் தெரிவித்த நிலையில் 07.12.2015 இல் சுகயீனம் ஏற்பட்டதால் தடைப்பட்டது. இந் நிகழ்வை அவரது மகன் தற்போது பொறுப்பெடுத்துள்ளார். தந்தை வழியில் தனயன் அமரது குடும்பம் அவரை இழந்த நிலையில் தவிக்கின்ற தவிப்பை நாங்கள் அறிவோம். ஏன் நீங்கள் யாவரும் அறிவீர்கள். அவர் கடைசியாகக் கூட எனது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதாக மகள் சொல்லியிருந்தார் . அவர் எதைச் சொல்ல நினைத்தாரோ தெரியவில்லை. சில நேரங்களில் இந்த உதவியை தனது செலவில் செய்வதாகவும் ஏற்கனவே கூறுவார். ஆனால் அவரது பிள்ளைகளுக்குத்தான் வெளிச்சம் இருந்தபோதும் இவரது சகோதரர்களில் கடைசி தவராஜா தனது ஆசை அண்ணாவின் நிகழ்விலாவது தான் பங்குபற்றக் கொடுத்து வைத்ததாகத் தெரிவித்தார். சேவை செய்தவர்கள் மறைந்தாலும் அவர்களுடைய சேவை மறையாது. இறுதியாக நாங்கள் எல்லோரும் சந்தோசமாக வழியனுப்பி வைப்போம். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச ஒன்றியத்தின் தலைவர் இ. மன்மதராசன்**

இன்று மீளாத்துயில் கொண்டிருக்கும் வயிரமுத்து தருமதுரை அவர்கள் ஆரம்பத்தில் மோட்டார் காருக்குச் சொந்தக்காரனாகி பின்பு மினிபஸ் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபட்டதை இன்று நாம் நினைத்துப் பார்க்கின்றோம். எங்கள் எல்லோருக்கும் வாகனங்கள் கொள்வனவு செய்ய வேண்டுமென்ற ஆசை அமரரால் தான் ஏற்பட்டது. இதை விட நாவலம்பதி ஞான வயிரவர் ஆலயத்தில் ஆரம்பத் தலைவராக இருந்துள்ளார். பின்பு நான் மூன்று வருடம் செயலாளராக இருந்தபோது அமரர் தருமதுரை தலைவராக இருந்து பல சேவை புரிந்ததை எம்மால் மறக்க முடியுமா? அன்னாரின் மறைவால் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞான வயிரவப் பெருமானை வேண்டுகின்றேன்.

**சமூக ஆர்வலரும் சிறுபான்மைத் தமிழர் சபைத் தலைவருமான திரு. சீ. குணநாயகம்**

பிறக்கின்றவர்களில் தன்னுடைய உழைப்பால் உயர்ந்தவர்கள் ஒரு சிலரே அவர்களில் அண்ணன் தருமதுரை அவர்களும் அடங்குவார். இவர் இருபத்தொரு வயதிலேயே கார் ஒன்றைக் கொள்வனவு செய்து சேவை புரிந்தார். 1970ஆம் ஆண்டளவில் எனது அண்ணர் தருமகுலசிங்கம் அமரருடைய காரில் கதிர்காமம் சென்று வந்ததை இப்போதும் கூறுவார். அமரர் தனது பிள்ளைகளை நல்வழிப்படுத்தி ஊரில் மதிக்கத்தக்கவர்களாக வளர்த்துள்ளார். நீண்ட காலம் இருக்க வேண்டியவருக்கு இப்படியான கொடிய நோய் வந்ததனால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. இவரது இழப்பு எமக்கு மாறாத துயரத்தை ஏற்படுத்தி யுள்ளது. அன்னாருக்கு எனது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஊரெழு ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் க. கிருஷ்ணவாசன்**

எமது கிராமத்திலே பிறந்தவர்களில் தனது விடாமுயற்சியினால் முன்னேறியவர் தான் அமரர் வயிரமுத்து தருமதுரை ஆவார். இவர் தனது இளமைக் காலத்தில் வளர்பிறை சனசமூக நிலையம் ஸ்தாபிப்பதற்கு பாடுபட்டுள்ளார். அதேபோல நாவலம்பதி ஞான வைரவர் ஆலயத்தின் தலைவராக நீண்ட காலம் இருந்து இறைபணியாற்றியுள்ளார். அமரர் தான் நினைத்த காரியத்தை செய்யக் கூடிய ஆற்றலுடன் இருந்து வருவதை நான் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அமரருக்கு சில காலங்கள் கொடிய நோய் வந்ததும் அவரது பிள்ளைகள் காப்பாற்று வதற்கு பாடுபட்டும் காப்பாற்ற முடியவில்லை. பிறந்தவர்கள் எல்லோருக்கும் விதியென்று ஒன்றுள்ளது. அதை வெல்ல முடியாது. அவருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு

07 . 01 . 1948

உதிர்வு

06 . 11 . 2016



அமரர்

## வயிரமுத்து தர்மதுரை

[ சர்வதேச ஒன்றிய உறுப்பினர் தர்மதுரை சுதர்சன் அவர்களது அன்பு தந்தையார் ]

இதயம் நின்று விட்டது !!!
இமயம் சரிந்து விட்டது !!!
உலகம் இருண்டு விட்டது !!!
இறைவா.....

மண்ணுலகம் விட்டு
விண்ணுலகம் சென்ற
எங்கள் "வயிரமுத்து தர்மதுரை" அவரை
மீண்டும் படைப்பாய் என
கண்ணீருடன் வேண்டுகிறோம்

சர்வதேச ஒன்றியம்
ஊரெழு கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
07 . 01 . 1948



உதிர்வு
06 . 11 . 2016

அமரர்

## வயிரமுத்து தர்மதுரை

[ முன்னாள் நிர்வாக உறுப்பினர்,
வளர்பிறை சனசமூக நிலையம் ]

வாழ்ந்த நாட்களை வசந்தமாக்கி
விட்டுச் சென்ற வாடா மலரே....!

உதிர்ந்தது நீங்கள் மட்டுமல்ல –
எங்கள் இதயமும் தான்....!

நிழலில் இசைந்தாடி நினைவில் இழைந்தோடி
நெஞ்சில் உயிர் வாழும் உறவே.....!

தன் கடன் பெற்றோற் காற்றி மலர்ச் சிறகில்
நீ வளர்ந்தாய் இன்று மறைந்தாய்....!


மண் கடல் வான் உளவும் மறவோமே....!

வளர்பிறை சனசமூக நிலையம்
ஊரெழு கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



ஊரெழு நாவலம்பதி
ஞானவைரவர் ஆலய பரிபாலன
சபையின் ஆரம்பத்
தலைவராகவும் தற்போது
உபதலைவராகவும் இருந்து
இறைபணிபுரிந்து அமரராகியுள்ள

**வயிரமுத்து தருமதுரை**

அவர்களின் இழப்பு எங்கள்
எல்லோரையும் தீராத சோகத்தில்
ஆழ்த்தியுள்ளது. அன்னாரின்
மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஞானவைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

**பரிபாலனசபை**
**ஊரெழு கிழக்கு.** **நாவலம்பதி ஞானவைரவர் ஆலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 06 |
| 01 | 11 |
| 1948 | 2016 |

## அமரர் வயிரமுத்து தர்மதுரை

கண்ணெனச் சுற்றத்தை நேசித்து
கனிவாய் வாழ்ந்திருந்தீர்
உற்றார் உறவினரைப் பேணி
உள்ளன்பு காட்டி இனிதாய் வாழ்ந்து
இரண்டாயிரத்து பதினாறில் உயிரை
விட்டுச் செல்லும் உத்தமரே உமை
எண்ணி எல்லோரும்
கலங்குகின்றோம்
எம்மோடு வாழ்ந்த உம் அன்புக்காய்
எம் அன்பைத் தருகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயரும்
நடராசா ராசமலர் குடும்பம்

சிறீ லக்ஸ்மி பிறிண்டேர்ஸ், பலாலிறோட், ஊரெழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன்....

ஊரெழு கிழக்கைச் சேர்ந்தவரும் 764, சி.சே.சங்க 60-3463 சிற்றூர்தி உரிமையாளரும் முன்னாள் நிர்வாக உறுப்பினருமாகிய

## அமரர் வயிரமுத்து தர்மதுரை



தோற்றம்
07.01.1948



மறைவு
06.11.2016



மரணமென்ற செய்தி அறிந்து அதிர்ந்து போனோம்
நேற்றுவரை எம்மோடு நிழலாக இருந்தீரே
காற்றெனவே வந்த செய்தி
கடிதனிலே பிரித்ததனால்
ஆற்றொணச் சோகமுற்றோம்
என்றும் எம் உள்ளத்தில் மறையாது உன் நினைவு!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்

764, புன்னாலைக்கட்டுவன் சி.சே.சங்கம்
சங்கநிர்வாகத்தினர், உரிமையாளர்கள்,
சாரதிகள், நடத்துனர்கள், நேரக்கணிப்பாளர்கள்

சிறிலக்ஷ்மி பிறிண்டேர்ஸ், பலாலிரோட், ஊரெழு T.P 0777 242168



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 07 | 06 |
| 01 | 11 |
| 1948 | 2016 |

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் வயிரமுத்து தர்மதுரை

பட்டென செய்தி ஒன்று சட்டென
வந்து எம் காதுகளில் விழுந்தது
கதிகலங்கி நின்றோம்
உண்மையா பொய்யா என.......
பரிதவித்து துடித்தோம்
காற்றெனவே வந்த விதி
கடிதினிலே பிரிந்ததனால்!
ஆற்றொணாச் சோகமுற்றோம்!
என்றும் எம் உள்ளத்தில்
மறையாது உன் நினைவுகள்.....

**அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

பிரிவால் துயரும்
நாகமுத்து இராசையா
சாரஞ்ஜா றான்ஸ்போட்
வேலுப்பிள்ளை யோகராசா

ஊரெழு கிழக்கு,
வளர்பிறை

ஸ்ரீலக்ஷ்மி பிரிண்டேர்ஸ், பலாலிரோட், ஊரெழு T.P 0777 242168



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றிகள்....

"நன்றி மறப்பது நன்றன்று
நன்றல்லது அன்றே மறப்பது நன்று"

எங்கள் குடும்பத் தலைவர் நோயுற்ற வேளையில் வீட்டிலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் கொக்குவில் கமலா ஆயுள்வேத வைத்தியசாலையிலும் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையிலும், நொதேன் சென்றல் வைத்தியசாலையிலும் பராமரிக்க உதவி புரிந்த வைத்திய கலாநிதிகளுக்கும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் அன்னாரை வைத்தியசாலையில் பராமரிக்க உதவியவர்களுக்கும், நலம் விசாரித்தோருக்கும் அவர் காலமாகிய செய்தி கேட்டவுடன் ஓடோடி வந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும் ஆறுதலும் தேறுதலும் கூறி எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இணையம், முகநூல், தொலைபேசி ஊடாக துயர் பகிர்ந்தோருக்கும் குறிப்பாக புலம்பெயர் உறவுகளுக்கும், வீட்டுக்கும் வெளியிடங்களில் இருந்து வந்து ஆறுதல் கூறி ஆலோசனை கூறிய நண்பர்கள், அன்பர்கள், உறவினர்கள், கண்ணீர் அஞ்சலி பதாதைகள் வெளியிட்ட சர்வதேச ஒன்றியம் மற்றும் ஞானவைரவர் ஆலயம், வளர்பிறை சனசமூக நிலையம், பொது நிறுவனங்கள் தம் உள்ளக் குமுறல்களைக் கண்ணீர் அஞ்சலிகளாக வெளியிட்ட அமரரின் உறவுகள், சினேகிதர்கள், நிகழ்வில் கலந்து அஞ்சலியுரை நிகழ்த்திய அன்புள்ளங்கள், இறுதிக் கிரியையினை மேற்கொண்ட ஆச்சாரியப் பெருமக்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் மயானம் வரை வந்து இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் துக்க வேளையில் உணவளித்து உதவிய அன்பு உள்ளங்களுக்கும் இறுதி நிகழ்வுகளை ஒழுங்கமைத்துதவியவர்களுக்கும் இந் நினைவு மலருக்குரிய அமரர் தொடர்பான அடையாளப் பதிவுகளைத் தந்துதவிய பெரியோர்களுக்கும் மற்றும் இந் நினைவு மலரை அழகுற அச்சிட்டுத் தந்த யாழ்ப்பாணம் அன்றா பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், கீரிமலை புனித தீர்த்தக் கரையில் அந்தியேட்டிக் கிரியைகளையும், இல்லத்தில் சபிண்டீகரணக் கிரியைகளையும் ஆற்றிய அந்தணப் பெருமக்களுக்கும் இன்றைய நினைவு மலர் வெளியீட்டிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*



*மணிமஹால்,*
*ஊரெழு கிழக்கு.*

*குடும்பத்தினர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்

*வயிரமுத்து+ *நன்னிப்பிள்ளை

- *இராசமணி
- *இராசதுரை
- *இராசமலர்
- *சிவலிங்கம்
- *திரவியம்
- *இராசாத்தி
- *தருமதுரை
- தங்கராசா
- தவராஜா

*பசுபதி + *மாணிக்கம்

- இராசேந்திரம் JP
- சிவமணி
- மகேந்திரம்
- தெய்வேந்திரம்
- புவனேந்திரம்
- * சந்திரன்
- குணேந்திரம் (சுவிஸ்)
- சந்திராதேவி
- சறோஜாதேவி


தருமதுரை + சிவமணி

- * தர்மேஸ்வரி + மகேந்திரராசா → லகின்சன்
- சுதாகரன் (ஜேர்மனி) + விதுலா (ஜேர்மனி) → சுவிற்றி, சுபானி
- சுதர்சன் (லண்டன்) + கீர்த்தனா (லண்டன்) → லவிஸ்
- சுதா + ஜெகன் (பிரான்ஸ்) → ஜன்சிகா, சுஜானி, துஷாரா
- சுமன் + நதியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Print@ Andra Printers, Jaffna. | 021 222 8929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org